மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06-ம் நாள் வெள்ளிக்கிழமை

அ.வ.எண். 23/18

பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: வாசன் | தேதி : 06.02.26 |
| வயது : | த/பெ :சுப்பையா |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>06.02.26 6 முதல் 10 மற்றும் 12 முதல் 19 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் தனியார் நிதிநிறுவனத்தில் கணக்காளராக பணிபுரிந்து வருகிறேன். நான் வருடத்திற்கு ஒருமுறை சொந்த ஊருக்கு வந்து செல்வேன். எனக்கு சொந்த ஊரில் வீடு உள்ளது. அந்த வீட்டின் சர்வே எண் தெரியாது. எனக்கு தாவா கிராமத்தில் வேறு சொத்துக்களும் உள்ளன. கிரையம் மூலம் ஏதேனும் சொத்துக்களை வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. என் தாத்தாவுடன் பிறந்தவர்கள் என் தாத்தாவை சேர்த்து 2 பேர் மட்டுமே ஆவர்.

2.என் தாத்தா பெயர் பால்பாண்டி நாடார். அவர் உடன்பிறந்த அண்ணன் பெயர் சின்னகனி நாடார். என் தாத்தாவின் அப்பா பெயர் தெரியாது. என் உடன்பிறந்தவர்கள் என்னை சேர்த்து 5 பேர். அவர்கள் என் அண்ணன் அதிஷ்டர், என் தம்பி கென்னடி, தங்கை சுபா, தம்பி சபாபதி ஆவர். என் சகோதர,சகோதரிகள் தாவா வழக்கில் தரப்பினர்களாக உள்ளனர் என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.06 18:07:13 +0530

3.தாவா வழக்கானது ஒரு சர்வே எண்ணை மட்டும் பொறுத்து வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பால்பாண்டி நாடார் மற்றும் சின்னகனி நாடாருக்கு இடையே தாவா சொத்தினை பொறுத்து பாகபிரிவினை நடந்ததா என்றால் ஆம். எந்த வருடம் பிரித்துகொண்டார்கள் என்றால் 1982ல் பிரித்துக்கொண்டார்கள். அந்த பாகபிரிவினையில் தபசில் சொத்து இல்லை என்றால் உண்மைதான். அதனால் தாவா சொத்தினை பொறுத்து பால்பாண்டி நாடாருக்கு பாகம் பிரித்து ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

4.என் பெயர் எந்த வருடம் பட்டாவில் சேர்க்கப்பட்டது என்றால் தெரியாது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் என் பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டது என்றால் உயிலின் அடிப்படையில் சேர்க்கப்பட்டது. தபசில் சொத்து மேற்படி உயிலில் எத்தனையாவது இலக்க சொத்து என்றால் தெரியாது. தாத்தா சொத்து பிரிக்கப்படாமல் இருந்தால் பேரன்கள் தனிப்பட்ட முறையில் கிரையம் கொடுக்கமுடியாது என்றால் சரியல்ல.

5.வழக்கை படித்து பார்த்து தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் விஸ்தீரணம் 8 செண்ட் ஆகும். தாவா சொத்தான சர்வே எண் 54/56Gக்கு 10.70 செண்ட் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் மொத்த சொத்தையும் விற்க முடியாது என்றால் சரியல்ல. 3ல் ஒரு பாகத்தை மட்டுமே விற்க உரிமை உள்ளது என்றால் சரியல்ல. அதனால் நான் 20ம் பிரதிவாதி உஷாவுக்கு எழுதிக்கொடுத்த அதிகார ஆவணம் செல்லத்தத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.06 18:07:18 +0530

6.20ம் பிரதிவாதி 10.01.2018ல் ஸ்ரீவைகுண்டம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்கள் 31/2018, 32/2018ன் கீழ் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரிய படி தாவா சொத்தில் 1/6 பாகமும், 6 முதல் 19 வரையிலான பிரதிவாதிகளுக்கு 1/3 பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருப்பதால் சரியான விபரங்கள் அறியாமல் கிரையங்கள் ஏற்படுத்திகொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயாரின் சொத்துக்களை பொறுத்து எங்களுக்குள் பாகப்பிரிவினை மற்றும் கிரைய ஆவணங்கள் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை</u>

**(மேற்படி குறுக்கு விசாரணையை 1ம் பிரதிவாதி தரப்பு ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)**

<u>குறுக்கு விசாரணை</u>

**வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை மதியத்திற்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.06 18:07:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06-ம் நாள் வெள்ளிக்கிழமை
அ.வ.எண். 23/18

பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: வாசன் தேதி : 06.02.26
வயது : த/பெ :சுப்பையா
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>06.02.26 வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் தற்போது பெங்களூரில் குடியிருந்து வருகிறேன். நானும், இவ்வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகளும் பால்பாண்டி நாடாரின் மகளான அன்னலெட்சுமி வாரிசுகள் என்றால் சரிதான். பால்பாண்டி நாடாரும், சின்னகனி நாடாரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். சின்னகனி நாடாரின் வாரிசுகள் தான் மலையாண்டியும், ராஜபாண்டியும் என்றால் சரிதான். அவர்களுடன் 2 மகள்களும் வாரிசுகளாக உள்ளன. அவர்கள் பெயர்கள் எனக்கு தெரியாது.

2.மலையாண்டி நாடாரின் வாரிசுகள் வாதி மற்றும் 6 முதல் 10 பிரதிவாதிகள் என்றால் எனக்கு தெரியாது. ராஜபாண்டிநாடாரின் வாரிசுகள் தான் 11 முதல் 19 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி திருச்செந்துார் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண் 37/2018 ல் நான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் அவ்வழக்கில் ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான்.

3.அவ்வழக்கில் கண்ட 1ம் தபசில் சொத்து பால்பாண்டி நாடாரின் வாரிசான அன்னலெட்சுமி அம்மாளுக்கு கிடைத்து அதன் பிறகு அவரது வாரிசுகளான எனது சகோதர, சகோதரிகளுக்கு கிடைத்தது என்றால் எனக்கு மட்டும்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.06 18:07:29 +0530

கிடைத்தது. 1ம் பிரதிவாதி என் அண்ணன் ஆவார். இவ்வழக்கின் தபசில் சர்வே எண் 54/56G யை மேற்படி சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 37/2018 ல் 2ம் தபசிலாக என் அண்ணன் காண்பித்திருந்தார் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 37/2018 ல் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் சின்னகனி மகள்களான குருத்து மற்றும் புஸ்பம் ஆகியோரை கட்சி சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருந்தேனா என்றால் தெரியாது.

4.மேற்படி குருத்துவின் குழந்தைகள் தான் ஞானசேகரன் மற்றும் சந்திரசேகரன் என்றால் தெரியாது. புஸ்பத்தின் மகன்தான் ஏரலில் உள்ள ராதாகிருஷ்ணன் தான் என்றால் தெரியாது. குருத்து மற்றும் புஸ்பத்திற்கு திருமணம் ஆகும் முன்பே அவர்களது தந்தையான எனது பெரிய தாத்தா சின்னகனி நாடார் இறந்துவிட்டார் என்றால் தெரியாது. சின்னகனி நாடார் 1940 ல் இறந்துபோனார் என்றால் தெரியாது. என் தாத்தா பால்பாண்டி நாடாருக்கு பாகப்பிரிவினையில் புல எண் 54/56A ல் 17 செண்ட் கிடைத்தது என்றால் சரிதான்.

5.கிழக்கு பக்கம் உள்ள 17 செண்ட் என் தாத்தாவுக்கும், மேற்கு பக்கம் உள்ள 17 செண்ட் வாதி வகையறாவினருக்கும் கிடைத்தது என்றால் சரிதான். நான் அதிஷ்ட லெட்சுமிக்கு எழுதிக்கொடுத்துள்ள வா.சா.ஆ 6 ல் மேற்கு பக்க எல்கையாக காண்பித்துள்ள வாசன் புஞ்சைக்கு கிழக்கு என காண்பித்துள்ள இடம் எனக்கு எப்படி பாத்தியம் என்றால் எனக்கு கிடைத்த 17 செண்டில் உள்பக்கம் ஆகும். எனக்கு கிடைத்த 17 செண்ட் என்று நான் கூறுவது பால்பாண்டி நாடாருக்கு பாகப்பிரிவினையில் பால்பாண்டிக்கு கிடைத்த இடம் ஆகும்.

6.நான் சொல்லும் 17 செண்டிற்கு மேற்கே உள்ள இடம் வாதி வகையறாவினருக்கும் அவரது சித்தப்பாவுக்கும் கிடைத்த இடம் என்றால் சரிதான். மேற்படி இரண்டு 17 செண்ட் பாகங்களும் புல எண் 54/56A ல் தான் உள்ளன என்றால் சரிதான். தாவா புல எண் 54/56G மேற்படி புல எண் 54/56A க்கு கிழக்கில் உள்ள இடம் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ 6 மூலம்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.06 18:07:34 +0530

அதிஷ்ட லெட்சுமிக்கு கிரையம் கொடுத்த இடம் புல எண் 54/56A க்குள் வருவதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல.

7.என்னுடைய எதிர்வழக்குரையில் புல எண் 54/56G பால்பாண்டி நாடாருக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த இடம் பால்பாண்டி நாடாருக்கு பாகப்பிரிவினையில் கிடைத்த இடத்திற்கு கிழக்கில் உள்ள இடம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 7ல் குறிப்பிட்டுள்ள ஜெயக்குமார் வீடு மனை என்பது புல எண் 54/56G க்கு கிழக்கில் உள்ளதாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

8.வா.சா.ஆ 6, 7 ஆவணங்கள் புல எண் 54/56G ஐ பொறுத்து என்னால் மோசடியாக பிறப்பிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. புல எண் 54/56G பிரிவினை ஆகாத சொத்து என்பதால் அதனை பொறுத்து கிரைய ஆவணங்கள் பிறப்பிக்க எனக்கு முழு உரிமை இல்லை என்றால் சரியல்ல. புல எண் 54/56G ஐ என் தாத்தா கிரையம் வாங்கிய ஆவணம் தொலைந்துவிட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதனை தேடி எடுத்துவிட்டேனா என்றால் இல்லை. புல எண் 54/56G சின்னகனி மற்றும் பால்பாண்டி நாடாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

9.வா.சா.ஆ 1ல் கண்ட பாகப்பிரிவினையில் புல எண் 54/56G உட்படுத்தப்படாமல் தொடர்ந்து கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. திருச்செந்தூர் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 37/2018 ஐ என் அணணன் அதிஷ்டர் மேல் நடத்தாமல் விட்டதால் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை தாக்கல் செய்யலாமா என்றால் அது என் குடும்பத்தின் தனிப்பட்ட வழக்கு சம்பந்தமானது ஆகும். அதனால் அதனை தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

10.மேற்படி வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை தாக்கல் செய்தால் தாவா வழக்கில் நான் செய்யும் கட்சிக்கு பாதகமாக இருக்கும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.06 18:07:39 +0530

காண்பிக்கப்படும் பி.சா.ஆ 2 பால்பாண்டி நாடார் எழுதி வைத்த உயிலில் புல எண் 54/56G காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் புல எண் 54/56 என்று பொதுவாக குறிப்பிடப்பட்டுள்ளது. உயிலில் புல எண் 54/56ல் எத்தனை செண்ட் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 17 செண்ட் தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

11.பி.சா.ஆ 2 உயிலின் அசல் என்னிடம் உள்ளது என்றால் இல்லை. அதனால் தான் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்துள்ளேன். பி.சா.ஆ 2 உயில் பால்பாண்டி நாடாரால் பிறப்பிக்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. புல எண் 54/56G என்ற உட்பிரிவு ஆனது நத்தம் நிலவரி கால திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் சின்னகனி நாடாருக்கு பூர்வீகமாக பாக உரிமை கிடைத்தது என்றும், சின்னகனி நாடார் 1940ம் ஆண்டிலே இறந்துவிட்டதால் அவரது பெண்மக்களுக்கு உரிமை கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

12.நத்தம் நிலவரி திட்டத்தில் புல எண் 54/56G உட்பிரிவு ஆனதை மறைத்து அதற்கு முந்தைய புஞ்சை பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நத்தம் நிலவரி திட்டத்தில் புல எண் 54/56G பால்பாண்டி நாடார், மலையாண்டி நாடார் மற்றும் ராஜபாண்டி நாடார் பெயரில் கூட்டு பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது என்றால் அது தவறாக ஏற்பட்ட பட்டாவாகும். நத்தம் நிலவரி திட்ட உட்பிரிவு தவறாக உள்ளதாக கூறி அதனை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். புல எண் 54/56F பொதுப்பாதையாகும். அது என் தாத்தா பெயரிலும், மலையாண்டி நாடார் மற்றும் ராஜபாண்டி நாடார் பெயரிலும் தவறாக பதிவாகியுள்ளது.

13.மேற்படி பொதுப்பாதை வழியாக தான் வாதி வகையறாவினர் அவர்களுக்குரிய 17 செண்ட் இடத்திற்கு செல்லமுடியும் என்றால் சரியல்ல. மேற்படி பொதுப்பாதை எங்களுக்கும், வாதி வகையறாவினருக்கும் பாத்தியப்பட்ட பொதுப்பாதை என்றும், பொதுமக்களுக்கு பாத்தியப்பட்ட பொதுபாதை அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண் 37/2018ல் கண்ட

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.06 18:07:44 +0530

சொத்துக்களை பொறுத்து நான் பாகப்பிரிவினை வழக்கு போட்டுள்ளேனா என்றால் அவசியமில்லை. அது எங்கள் குடும்பம் சம்பந்தப்பட்ட வழக்கு ஆகும். அதில் கண்ட சொத்துக்களை பொறுத்து பாகபிரிவினை பத்திரம் எழுதிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். தேவைப்படவில்லை.

14.மேற்படி அசல் வழக்கினை நானும், அதன் வாதி அதிஷ்டரும் இணக்கமாக முடித்துக்கொண்டோம் என்றால் சரிதான். வாதி குடும்பத்திற்குரிய புல எண் 54/56 G சொத்தினை மோசடி செய்வதற்காக தான் அதில் 2ம் இலக்கமாக புல எண் 54/56G ஐ காண்பித்து பிறகு வழக்கை நடத்தாமல் விட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மலையாண்டி நாடார், பால்பாண்டி நாடார், ராஜபாண்டி நாடாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு நாளது தேதி வரை பிரிவினை ஆகாமல் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

15.வழக்கு சொத்தில் வாதி மற்றும் மலையாண்டி நாடாரின் வாரிசுகளுக்கு 3ல் 1 பாகம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பாகத்தை அபகரிப்பதற்காகதான் பால்பாண்டி நாடாருக்கு புல எண் 54/56G கிரையம் மூலம் பாத்தியப்பட்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குசொத்திற்கு நத்தம் நிலவரி திட்ட பட்டா உரிமையின் அடிப்படையில் ஏற்பட்டுள்ளதால் அதனை தவறு என்று கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வா.சா.ஆ 6, 7 கிரைய ஆவணங்களை மோசடியாக பிறப்பித்ததால் தான் வாதி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

16.வழக்கு சொத்திற்குரிய அசல் ஆவணம் தொலைந்துவிட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறான ஆவணம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. பால்பாண்டி நாடாருக்கு கிரையம் மூலம் கிடைத்த 18 செண்ட் சொத்தினை உயில் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்தது பொய் என்றால் சரியல்ல. நான் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணங்களின் அடிப்படையில் 21, 22 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.06 18:07:50 +0530

17.21, 22 பிரதிவாதிகள் வழக்கு சொத்தினை அனுபவம் செய்து வருவதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. வாதிக்கு வழக்குரையில் கேட்ட பாகம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.06 18:07:54 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.